# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 198/ந/2017**

**ஆணை எண். 98/2018**

**நாள் : 13/04/2018**

திரு கா. சுப்பராயன்,
நாமக்கல்.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல்

– எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம், பாரதி நகர், எண்.3/139, மோகனூர் சாலை முகவரியில் வசிக்கும் திரு கா. சுப்பராயன் அவர்களின் 13.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 16.10.2017 அன்று பெறப்பட்டு, 198/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம், பாரதி நகர், எண்.3/139, மோகனூர் சாலை முகவரியில் வசிக்கும் திரு கா. சுப்பராயன் என்பவர், நாமக்கல் நகரில் பொது இடங்களை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள 17 கோவில்களைக் குறிப்பிட்டு, ஆக்கிரமிப்புக் கோவில் பகுதிகளை அகற்றுவதற்கு நாமக்கல் நகராட்சி நிர்வாகம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில், கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) ஆக்கிரமிப்பு கட்டடங்களை அகற்றத் தவறிய நாமக்கல் நகராட்சி ஆணையருக்கு ஐந்து லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கவும் ;

(2) நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மாண்பமை நீதிமன்றங்களின் ஆணைகளை செயல்படுத்தத் தவறிய நாமக்கல் நகராட்சி ஆணையர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ;

(3) முறையீட்டு மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு இழப்பீடாக அவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணையிடவும் ;

(4) முறையீட்டு மனுதாரரின் செலவினத்தைச் சரிகட்ட அவருக்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்க ஆணையிடவும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். .

2. முறையீட்டு மனுதாரரிடம் 22.01.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப் பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக விவரம் கோரியதாகவும் அதற்கு நகராட்சி ஆணையர் தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென அவரது 28.03.2011 நாளிட்ட

கடிதத்தில் தெரிவித்ததாக விசாரணையின்போது குறிப்பிட்டார். 2011–ஆம் ஆண்டிலேயே அகற்றப்பட வேண்டிய ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும் தெரிவித்தார். மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி ஆணையர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்த ஐந்து லட்சத்து, அறுபதாயிரம் (ரூ.5.60 இலட்சம்) ரூபாயில், ஐந்து இலட்சம் ரூபாயைத் தண்டத் தொகையாக நகராட்சி ஆணையரிடமிருந்து வசூலிக்கவும் மீதித் தொகை அறுபதாயிரம் ரூபாயை தனக்கு வழங்க ஆணையிடவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. 25.01.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவக் கடித எண்.198/2017–இல் முறையீட்டு மனுதாரரிடம் கோவில்கள் கட்டப்பட்டுள்ள நிலங்கள் சம்பந்தப்பட்ட துறை விவரங்கள், ஆக்கிரமிப்புக்குள்ளான நிலங்களின் கால அளவுகள், கோவில் நிர்வாகிகளின் முகவரி விவரங்கள் மற்றும் புல எண். விவரங்கள் கோரப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2010–ஆம் ஆண்டில் பெறப்பட்ட விவரங்களைத் தனது 06.02.2018 நாளிட்ட கடிதத்தில் சமர்ப்பித்துள்ளார். அவ்விவரங்களை ஆய்வு செய்ததில் மனுதாரர் குறிப்பிட்ட 17 கோவில்களில் 5 கோவில்கள் நகராட்சி சாலை நிலத்தில் பகுதியினையும், 1 கோவில் பூங்கா நிலத்தில் சிறுபகுதியினை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. எஞ்சிய 11 கோவில்கள் அனைத்தும் வேறு அரசுத் துறைகளுக்குச் சொந்தமான பகுதி நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. மேலும், அரசு / நகராட்சியின் நிலங்கள் கோவில்கள் கட்டப்பட்டு ஆக்கிரமிப்புக்குள்ளானதின் கால அளவு 4 முதல் 50 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் எனவும் அறிய நேரிடுகிறது. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள 17 நேர்வுகளிலும் 1101 சதுர மீட்டர் பரப்பளவிலான அரசுத் துறை சம்பந்தப்பட்ட நிலங்கள் மட்டுமே வழிபாட்டுத் தலங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன எனவும் கண்டறிய முடிகிறது.

4. ஆக்கிரமிப்புக்குள்ள நிலம் குறித்த பரப்பளவு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையிலேயே முறையீட்டு மனுதாரர் அளித்துள்ளார். ஆனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிலப்பரப்பு சரியானதுதானா என முறையீட்டு மனுதாரர் உறுதி செய்ததாகத் தெரியவில்லை. முறையீட்டு மனுதாரர் 75 அகவையிதனை எய்திய நாமக்கல் நகராட்சியின் மூத்த குடிமகன். முறையீட்டு மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்புக்குள்ளான நிலங்களின் கால அளவும் 4–50 ஆண்டுகளுக்கு இடைப்பட்டது. முறையீட்டு மனுதாரர் கோவில்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பொது நிலங்களைக் கண்டறிந்து அதற்குக் காரணமான அலுவலர்களுக்கு தண்டத்தொகை விதிக்கக்கோரும் முறையீட்டு மனுதாரர், மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியதாகவே உள்ளது. எனினும், நாமக்கல் நகர்வாசியான மனுதாரருக்கு வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்கும் நிர்வாகிகளின் பெயர் விவரம் எதுவும் இல்லை எனத் தெரிவித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. தனியார் ஆக்கிரமிப்பு உட்பட எந்தவொரு ஆக்கிரமிப்பினையும் அகற்றப்படவேண்டுமெனில் இயற்கை நீதியின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்புதாரருக்கு உரிய அறிவிக்கை வழங்கி அது குறித்து விளக்கத்தினைப் பெற்று அதன் பின்பே ஆக்கிரமிப்புகளை அகற்றுதவற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே சட்டரீதியில் முறையான செயலாகும்.

5. மேலும், முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை முறையாகப் பயன்படுத்தி, அத்தகவல்கள் அடிப்படையிலேயே, ஆக்கிரமிப்பு குறித்த விவரங்களைப் பெற்றுள்ளார். ஆக்கிரமிப்புகளை அகற்றத் தவறிய நகராட்சி ஆணையருக்குத் தண்டத் தொகை விதிக்கவும், தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் வழக்கு செலவுத் தொகையினை ஈடுகட்ட ரூபாய் அறுபதாயிரம் ரூபாய் நகராட்சி ஆணையரிடமிருந்து வசூலித்து தரவும் கோரியுள்ளார். நகராட்சி ஆணையருக்கு தண்டத் தொகை விதிக்கவும், தனக்கு இழப்பு ஏற்பட்டதாகக் கருதிக் கொண்டு அத்தொகையினை வசூலித்துத் தரக்கோரும் முறையீட்டு மனுதாரர் தனது மனுவிலோ அல்லது விசாரணையின்போதோ கோவில்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதிகள் மீட்கப்படவேண்டும் என்ற முறையீட்டினை தெரிவிக்க முழுவதுமாகவே தவறியுள்ளார். மாறாக நகராட்சி ஆணையருக்கு தண்டம் விதிக்கக் கோரும் கோரிக்கையும் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் செலவினத்தை சரிகட்ட இழப்பீடு வழங்கக்கோரும் கோரிக்கையே மேலோங்கி நிற்கிறது. என்பதை இம்முறைமன்ற நடுவம் இந்நேர்வில் பதிவு செய்கிறது. ஆக்கிரமிப்புகளின் கால அளவுகள் 4 முதல் 50 ஆண்டுகளுக்கு இடைப்பட்டது. எனவே, இடைப்பட்ட காலத்தில் பணியாற்றிய நகராட்சி ஆணையர்களில், யாருடைய பணிக்காலத்தில் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன என்பதை கண்டறிவதும், அதற்கு அவர்களைப் பொறுப்பாக்கி தண்டத் தொகையினை வசூலிப்பதும் நடைமுறைக்கு ஏற்புடைய செயலாக இல்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும்,

முறையீட்டு மனுதாரர் எந்தவொரு நகராட்சி ஆணையரையும் பொறுப்பாக்கி ஆக்கிரமிப்பு சம்பந்தமானக் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்காத நிலையில், அவருக்கு ஏற்பட்ட செலவினம் மற்றும் மன உளைச்சல் ஆகிய இரண்டு இனங்களுக்கும் சேர்த்து அறுபதாயிரம் ரூபாய் வழங்க ஆணையிட வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது. முறையீட்டு மனுதாரர் நாமக்கல் நகர் பகுதிகளில் 1101 சதுர மீட்டர் பரப்பளவிலான சாலை மற்றும் பொது நிலங்கள், வழிபாட்டுத் தலங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன எனத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் விவரங்களைப் பெற்றும் அவ்வாக்கிரமிப்புகளை அகற்ற முறையீட்டு மனுதாரர் முறையான கோரிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. எனினும், முறையீட்டு மனுதாரர் நகராட்சியில் தாக்கல் செய்த முந்தைய மனுக்கள் ஏதேனும் நிலுவையிலிருப்பின் அவற்றின் அடிப்படையிலும் பொது நலன் கருதியும் நகராட்சி சாலை மற்றும் பூங்கா நிலங்களில் வழிபாட்டுத்தலங்கள் கட்டப்பட்டிருந்தால் மனுதாரரிடமிருந்து கோவில் நிர்வாகிகளின் விவரங்களைப் பெற்று உரிய நடைமுறையினைப் பின்பற்றி விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் நாமக்கல் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 15-4-18

19-4-18

19/4/18

பெறுநர்

1. திரு. கா. சுப்பிரமணியன்,
3/139, பாரதி நகர், மோகனூர் சாலை,
நாமக்கல் – 637 001.

2. நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல்,

3. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,
சேலம், சேலம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி